**சார்பு நீதிமன்றம், மேட்டூர்**
**முன்னிலை: திரு.R.சரவண பாபு, பி.ஏ.,எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, மேட்டூர்**
**2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் நாள் திங்கள்கிழமை**
**இந்து திருமணம் அசல் மனு எண். 57/2026**
**CNR.No.TNSA16-000234-2026**

இலக்கியா ... மனுதாரர்

//எதிராக//

ரமேஷ் ... எதிர்மனுதாரர்

இம்மனு கடந்த 10.07.2026-ம் தேதி என் முன்னிலையில் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் S. பீட்டர்ராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜரின்மையினாலும் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு எதிர்மனுதாரர் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 08.06.2017 ம் தேதி நங்கவள்ளி ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் சுவாமி கோவிலில் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்யக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 08.06.2017 ம் தேதியில் நங்கவள்ளியில் உள்ள ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் சுவாமி கோயிலில் திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்தின்போது மனுதாரருக்கு அவரது பெற்றோர் 10 பவுன் தங்க நகைகள் அணிவித்ததாகவும், வீட்டிற்கு தேவையான பொருட்களை

சீர்வரிசையாக கொடுத்ததாகவும், திருமண செலவுகள் அனைத்தையும் உபயமனுதாரர்களின் பெற்றோர்கள் ஏற்றுக்கொண்டதாகவும், திருமணத்தின்போது எதிர்மனுதாரர் பெயிண்டர் வேலை செய்து வந்ததாகவும், திருமணத்தின் பயனாய் உபயமனுதாரர்களுக்கு கடந்த 05.12.2020 ம் தேதியில் நிவி என்ற பெண் குழந்தை பிறந்ததாகவும், திருமணத்திற்குப் பின்னிட்டு மனுதாரர் எதிர்மனுதாரரின் வீட்டில் வாழ்ந்து வந்ததாகவும், எதிர்மனுதாரரின் வீட்டில் அவரது பெற்றோர் மனுதாரரை வரவேற்காமல் இறுகிய முகத்துடனே இருந்ததாகவும், திருமணமான சில நாட்களிலேயே எதிர்மனுதாரர் பல பெண்களுடன் தகாத உறவில் இருந்தது தெரியவந்ததாகவும், அதுபற்றி எதிர்மனுதாரரின் பெற்றோரிடம் தெரிவித்தபோதும் அதை அவர்கள் கண்டுக்கொள்ளவில்லை என்றும், திருமணத்திற்கு முன்பு எதிர்மனுதாரருக்கு குடிப்பழக்கம் இருப்பது மனுதாரருக்கு தெரியாது என்றும், திருமணத்திற்கு பின்புதான் தெரியும் என்றும், எதிர்மனுதாரர் அவர்மீது தவறை வைத்துக்கொண்டு மனுதாரரை தவறானவள் போல் சித்திரித்ததாகவும், எதிர்மனுதாரரின் குடிப்பழக்கம், விலைமாதர் தொடர்பு பற்றி கேட்கும்போதெல்லாம் மனுதாரரை அடித்து துன்புறுத்துவதாகவும், மனுதாரருக்கு அலைபேசியில் அழைப்பு வந்தால் கூட எதிர்மனுதாரர் சந்தேகப்பட்டு மனுதாரரை அடித்து துன்புறுத்துவதாகவும், மனுதாரரின் பெற்றோரிடமிருந்து அழைப்பு வந்தாலும் அடித்து துன்புறுத்தி ஒரு மனநோயாளி போல நடந்துகொண்டதாகவும், எதிர்மனுதாரர் மீது ஓமலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு நிலுவையில் உள்ளதாகவும், எதிர்மனுதாரரின் செயல்கள் குறித்து மனுதாரர் அவரின் பெற்றோரிடம் தெரிவித்ததாகவும், மனுதாரரின் பெற்றோர் ஏன் என் மகளை அடித்து துன்புறுத்துகிறீர்கள் என்று கேட்டதாகவும், அதற்கு எதிர்மனுதாரர் அவர்களை கெட்ட வார்த்தைகளால் திட்டி அனுப்பியதாகவும், மனுதாரரின் பெற்றோர் மனுதாரருக்கு ஆறுதல் கூறி

எதிர்மனுதாரருடன் வாழுமாறு கூறியதாகவும், கடந்த 05.11.2024 ம் தேதி நண்பகலில் மனுதாரர் தூங்கிக் கொண்டிருந்தபோது எதிர்மனுதாரர் மனுதாரரை முடியை பிடித்து இழுத்து அடித்து வீட்டை விட்டு துரத்தி கதவை பூட்டிக்கொண்டதாகவும், மனுதாரர் எவ்வளவோ கெஞ்சியும் எதிர்மனுதாரர் கதவை திறக்கவில்லை என்றும், மனுதாரர் தனது குழந்தையுடன் தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், மனுதாரர் எதிர்மனுதாரருடன் பேச அலைபேசியில் அழைத்தபோதும் அதை அவர் ஏற்கவில்லை என்றும், மனுதாரரின் பெற்றோர் எதிர்மனுதாரருடன் பேசியும் அதை அவர் ஏற்கவில்லை என்றும், கடந்த 10.05.2025 ம் தேதியில் ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து நடத்தியும் எதிர்மனுதாரர் அதை ஏற்கவில்லை என்றும், மனுதாரரும் எதிர்மனுதாரரும் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக பிரிந்து வாழ்ந்துவருவதால்எதிர்மனுதாரருடன் மனுதாரர் இனியும் சேர்ந்து வாழமுடியாது என்ற நிலைக்கு தள்ளபட்டுவிட்டதாகவும், மனுதாரர் வேறு வழியின்றி எதிர்மனுதாரரிடம் விவாகரத்து பரிகாரம் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3. இம்மனு இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்ட பிறகு எதிர்மனுதாரருக்கு நீதிமன்றத்தில் இருந்து அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்.

**<u>4.பிரச்சனை:</u>**

மனுதாரர் கோரிய படி இந்து திருமண சட்டம் பிரிவு 13(1) (i–a)ன் கீழ் விவாகரத்து அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆய்விற்குட்பட்ட கருப்பொருள் ஆகும்.

**5.** இம்மனுவில், மனுதாரர் தரப்பில், மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மனுதாரர் தரப்பில் ம.சா.2 ஆக பழனிசாமி விசாரிக்கப்பட்டுள்ளார். எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராக இருந்துள்ளார்.

**6.** மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டு, மனு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**7.** மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 08.06.2017 ம் தேதி நங்கவள்ளி ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் சுவாமி கோவிலில் திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்திற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர் மனுதாரரை தொடர்ந்து உடளவிலும், மனதளவிலும் பல்வேறு வகையில் கொடுமைப்படுத்தி வருவதால் அவர்களுக்கிடையே நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்க கோரி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8.** மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளையே மனுதாரர் தனது நிரூபண வாக்குமூலத்திலும் கூறியுள்ளார்.

**9.** மனுதாரர் தரப்பில், உபயமனுதாரர்களின் திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ.1 ஆகவும், உபயமனுதாரர்களின் திருமண புகைப்படம் ம.சா.ஆ.2 ஆகவும், மனுதாரரின் மகள் நிவியின் பிறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.3 ஆகவும், மனுதாரரின் ஆதார் அட்டை ம.சா.ஆ.4 ஆகவும், மனுதாரர் மகளின் ஆதார் அட்டை ம.சா.ஆ.5 ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளன.

10. மேற்படி மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பார்வையிடுகையில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருவருக்கும் கடந்த 08.06.2017 ம் தேதியில் திருமணம் நடைபெற்றுள்ளது என்பது தெரியவருகிறது.

11. மனுதாரர் தனது மனுவிலும், சாட்சியத்திலும் எதிர்மனுதாரர் தன்னை திருமணத்திற்கு பிறகு உடளலவிலும், மனதளவிலும் கொடுமைப்படுத்தியதாக

குறிப்பிட்டுள்ள நிலையில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் குறித்து எதிர்மனுதாரருக்கு ஆட்சேபணை இருந்திருந்தால் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்து எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி இருப்பார் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே எதிர்மனுதாரர் தோன்றாத்தரப்பினராகியுள்ள நிலையிலும், மனுவில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள விவரங்களை எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்காத நிலையிலும், எதிர்மனுதாரரின் கொடுமைக்கு மனுதாரர் ஆளாகியுள்ளார் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**12.** மேலே ஆராய்ந்த வகையில், மனுதாரர் தனது மனுவில் எதிர்மனுதாரர் தன்னை கொடுமைப்படுத்தியதாக குறிப்பிட்டு அதற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், எதிர்மனுதாரர் தரப்பில் அதை மறுதளிக்கும் வகையில் சாட்சியம் முன்வைக்கப்படாத நிலையிலும், மனுதாரர் திருமணத்திற்கு பின்னிட்டு உடலளவிலும், மனதளவிலும் எதிர்மனுதாரரின் கொடுமைக்கு ஆளாகி உள்ளார் என்று தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்திமன்றம் கருதுகிறது.

**13.** மேலே ஆராய்ந்த வகையில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 08.06.2017ம் தேதி நங்கவள்ளி ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் சுவாமி கோவிலில் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு ஏற்றதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**14.** முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 08.06.2017ம் தேதி நங்கவள்ளி, ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் சுவாமி கோவிலில் நடைபெற்ற திருமணத்தை, இந்து

திருமண சட்டம், 1955 பிரிவு 13(1) (i–a)ன் கீழ் ரத்து செய்து, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் விவாகரத்து வழங்கி ஒருதலைப்பட்ச உத்தரவிடப்படுகிறது. செலவு தொகையை தரப்பினர்களே ஏற்று கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 20ம் நாள் திங்கள்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R.SARAVANA BABU

Digitally signed by R.SARAVANA BABU

**சார்பு நீதிபதி,**
**மேட்டூர்**

**மனுதாரர் தரப்பு சாட்சி:**

ம.சா.1 – திருமதி. இலக்கியா
ம.சா.2 – திரு. பழனிசாமி

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 08.06.2017 | திருமண அழைப்பிதழ் | அசல் |
| ம.சா.ஆ.2 | 08.06.2017 | திருமண புகைப்படம் | அசல் |
| ம.சா.ஆ.3 | 30.04.2021 | மனுதாரரின் மகள் நிவியின் பிறப்பு சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ.4 | – | மனுதாரரின் ஆதார் அட்டை | நகல் |
| ம.சா.ஆ.5 | – | மனுதாரர் மகளின் ஆதார் அட்டை | நகல் |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:இல்லை**

R.SARAVANA BABU

Digitally signed by R.SARAVANA BABU

**சார்பு நீதிபதி,**
**மேட்டூர்**